**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 539/2025**

**Prosecution witness : அ.சா. 1** **Date : 02.12.2025.**

| | |
|---|---|
| **Name : துரைசாமி** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் சூரப்பள்ளியில் குடியிருந்து தறி கூலி வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். என் சித்தப்பா வெளியே சென்றால் ரேவதி தண்ணீர் விடுவார். கடந்த 25.06.2023ம் தேதி மாலை 06.40 மணிக்கு என் சித்தி டேங்கிலிருந்து தண்ணீர் எடுத்து விட்ட போது எதிரிகள் நால்வரும் வந்து டேங்கிலிருந்து தண்ணீர் எடுத்துவிட வேண்டாமென்று சொல்லி தகராறு செய்தார்கள்.

2) கண்ணன், பழனியம்மாள், ஆனந்தன், பாபு நால்வரும் என் சித்தியை பார்த்து தண்ணீரை ஏன் எடுத்துவிட்டாய் என தகராறு செய்தார்கள். பிறகு எதிரிகள் கெட்ட வார்த்தையால் தெவிடியா, கண்டாரஓலி என்று பேசினார்கள். கண்ணன் கீழே கிடந்த கல்லை எடுத்து என் முதுகின் மீது குத்தினார். பழனியம்மாள் என் கன்னத்தில் அறைந்தார். ஆனந்தன் என்னை எட்டி உதைத்தார். பாபு என் காலை பிடித்து தரதரவென்று இழுத்தார்.

3) பிறகு காயம் அடைந்த என்னை பழனியப்பன் இரு சக்கர வாகனத்தில் ஜலகண்டாபுரம் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்து பிறகு சேலம் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சேர்க்கப்பட்டு 4 நாட்கள் சிகிச்சை பெற்றேன். நான் சேலம் அரசு மருத்துவமனையிலிருந்த போது ஜலகண்டாபுரம்

போலீசார் நடந்த விவரத்தை என்னிடம் வாக்குமூலமாக கேட்டார்கள். நான் நடந்த விவரத்தை சொன்னேன். அவர்கள் புகார் வாக்குமூலமாக பதிவு செய்தார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1** ஆகும். ஆஜர் எதிரிகள் தான் அடித்ததாக சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். தற்போது என்னிடம் காட்டப்படும் கல்லால் தான் அடித்தார்கள் என்று சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். கல் **சா.பொ.1** ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**</u>

4) என் சித்தப்பா பழனியப்பன் தான் தண்ணீர் எடுத்துவிடும் நபர் என்றால் ஆமாம். அவர் அரசு சார்பில் பணம் எதுவும் பெறுவதில்லை என்றால் ஆமாம். எப்போது வேண்டுமானாலும் தண்ணீர் விடுவாரா என்றால் காலை 9 மணிக்குள் தண்ணீர் வரவேண்டும். தண்ணீர் விட நேரம் கிடையாது. எதிரிகள் வீடு மேட்டு பகுதியில் உள்ளது என்றால் ஆமாம். இறக்கமான பகுதிக்கு தண்ணீர் போகும் என்றால் ஆமாம்.

5) மாலை 6.30 மணிக்கு சம்பவம் நடந்தது. எதிரிகள் தண்ணீர் வரவில்லை என்று சொன்னார்கள் என்றும் நான் பொய்யாக புகார் கொடுத்தோம் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த போது யார் யார் இருந்தார்கள் என்றால் மணிகண்டன், சின்னபையன் ஆகியோர் இருந்தார்கள். அவர்கள் எங்கு வசிக்கிறார்கள் என்றால் அருகில் வசிக்கிறார்கள். என்னை என்று போலீசார் விசாரித்தார்கள் என்றால் 01.07.2023 ம் தேதி விசாரித்தார்கள்.

6) சம்பவம் நடந்து 4 நாட்களுக்கு பிறகு டிஸ்சார்ச் ஆகிவிட்டேன் என்றால் ஆமாம். நான் சொன்னவாறு சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

D.Myilswamy Digitally signed by D.Myilswamy Date: 2025.12.02 17:57:02 +0530

Judicial Magistrate No.II,
Mettur.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 539/2025**

**Prosecution witness : அ.சா. 3** **Date : 02.12.2025.**

| Name : ரேவதி | Taluk : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Age : |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் சூரப்பள்ளியில் குடியிருந்து தறி தொழில் செய்கிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1 என் உறவினர் ஆவார். நான் தான் என் கணவர் வெளியே சென்ற போது தண்ணீர் எடுத்து விடுவேன். கடந்த 25.06.2023ம் தேதி மாலை 06.40 மணிக்கு நான் டேங்கிலிருந்து தண்ணீர் எடுத்து விட்ட போது எதிரிகள் நால்வரும் வந்து டேங்கிலிருந்து தண்ணீர் எடுத்துவிட வேண்டாமென்று சொல்லி தகராறு செய்தார்கள்.

2) கண்ணன், பழனியம்மாள், ஆனந்தன், பாபு நால்வரும் என்னை பார்த்து தண்ணீரை ஏன் எடுத்துவிட்டாய் என தகராறு செய்தார்கள். பிறகு எதிரிகள் கெட்ட வார்த்தையால் தெவிடியா, கண்டாரஓலி என்று பேசினார்கள். கண்ணன் கீழே கிடந்த கல்லை எடுத்து அ.சா.1 முதுகின் மீது குத்தினார். பழனியம்மாள் அ.சா.1 கன்னத்தில் அறைந்தார். ஆனந்தன் அ.சா.1 எட்டி உதைத்தார். பாபு அ.சா.1 காலை பிடித்து தரதரவென்று இழுத்தார்.

3) பிறகு காயம் அடைந்த அ.சா.1யை என் கணவர் இரு சக்கர வாகனத்தில் ஜலகண்டாபுரம் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்து பிறகு சேலம் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றார். ஆஜர் எதிரிகள் தான் அடித்ததாக சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம்

காட்டினார். தற்போது என்னிடம் காட்டப்படும் கல்லால் தான் அ.சா.1யை அடித்தார்கள் என்று சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

4) என் கணவர் தான் தண்ணீர் எடுத்துவிடுவார் என்றால் ஆமாம். சம்பவ சமயம் என் கணவர் வெளியே சென்றதால் நான் எடுத்துவிட்டேன். என் கணவர் தண்ணீர் எடுத்துவிட்ட போது எந்த பிரச்சனையும் இல்லை என்றால் ஆமாம். கிழக்கு பக்கமாக உள்ள பைப்பில் தண்ணர் அதிகமாகவும், மேற்குபக்கமாக உள்ள பைப்பில் தண்ணீர் குறைவாக அவர்களுக்கு வந்ததாகவும் அவர்கள் சொல்ல வந்தார்கள் என்றால் சரியல்ல. அவர்கள் வரும் போதே கெட்ட வார்த்தையால் பேசிக் கொண்டே வந்தார்கள்.

5) 01.07.2023ம் தேதி என்னை விசாரித்தனர். கையெழுத்து எதுவும் நான் போடவில்லை என்றால் சரிதான். நான் சொன்னவாறு சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

D.Myilswamy Digitally signed by D.Myilswamy Date: 2025.12.02 17:57:07 +0530

Judicial Magistrate No.II,
Mettur.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 539/2025**

**Prosecution witness : அ.சா. 2** **Date : 02.12.2025.**

| | |
|---|---|
| **Name : பழனியப்பன்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் சூரப்பள்ளியில் குடியிருந்து தறி கூலி வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1 துரைசாமி என் அண்ணன் மகன் ஆவார். என் மனைவி தான் டேங்கிலிருந்து தண்ணீர் எடுத்து விடுவார். நான் ஆப்ரேட்டராக இருந்தேன். கடந்த 25.06.2023ம் தேதி மாலை 06.40 மணிக்கு என் மனைவி டேங்கிலிருந்து தண்ணீர் எடுத்து வந்த போது எதிரிகள் நால்வரும் வந்து டேங்கிலிருந்து தண்ணீர் எடுத்துவிட வேண்டாமென்று சொல்லி தகராறு செய்தார்கள்.

2) எதிரிகள் கெட்ட வார்த்தையால் தெவிடியா, கண்டாரஓலி என்று பேசினார்கள். கண்ணன் கீழே கிடந்த கல்லை எடுத்து அ.சா.1ன் முதுகின் மீது அடித்தார். பழனியம்மாள் அ.சா.1ன் கன்னத்தில் அறைந்தார். ஆனந்தன் அ.சா.1யை எட்டி உதைத்தார். பாபு அ.சா.1ன் காலை பிடித்து தரதரவென்று இழுத்தார்.

3) பிறகு காயம் அடைந்த அ.சா.1யை நான் இரு சக்கர வாகனத்தில் ஜலகண்டாபுரம் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்து பிறகு சேலம் அரசு மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை பெற்றார். ஆஜர் எதிரிகள் தான் அடித்ததாக சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். தற்போது என்னிடம் காட்டப்படும் கல்லால் தான் அ.சா.1யை அடித்தார்கள் என்று சாட்சி

திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

4) சம்பவம் நடந்த போது நான் இருந்தேனா என்றால் இருந்தேன். சம்பவயிடத்தில் யார் யார் இருந்தார்கள் என்றால் சுமார் 10 பேர் இருந்தார்கள். இவர்கள் 6 பேர், மணிகண்டன், சின்னபையன், மாதைய்யன், சந்திரா ஆகியோர் இருந்தனர். துரைசாமியை கண்ணன், ஆனந்தன் அடித்தார்கள். என்னையும் அடித்தார்கள். ஆனால் எனக்கு காயம் எதுவும் இல்லை. நான் சொன்னவாறு சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. தண்ணீர் வரவில்லை என்று எதிரிகள் கேட்ட போது நாங்கள் தான் சண்டை போட்டோம் என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தண்ணீரை நான் தான் எடுத்துவிடுவது வழக்கம் என்றும் என் மனைவியை வைத்து எதிரிகள் மீது பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

D.Myilswamy Digitally signed by D.Myilswamy Date: 2025.12.02 17:57:12 +0530

Judicial Magistrate No.II,

Mettur.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 539/2025**

**Prosecution witness : அ.சா. 4** **Date : 02.12.2025.**

| | |
|---|---|
| **Name : மணிகண்டன்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் சூரப்பள்ளியில் குடியிருந்து தறி தொழில் செய்கிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1 என் சின்ன தாத்தா பேரன் ஆவார். கடந்த 25.06.2023 ம் தேதி மாலை 06.40 மணிக்கு அ.சா.3 டேங்கிலிருந்து தண்ணீர் எடுத்து விட்ட போது எதிரிகள் நால்வரும் வந்து டேங்கிலிருந்து தண்ணீர் எடுத்துவிட வேண்டாமென்று சொல்லி தகராறு செய்தார்கள்.

2) கண்ணன், பழனியம்மாள், ஆனந்தன், பாபு நால்வரும் அ.சா.1 யை பார்த்து தண்ணீரை ஏன் எடுத்துவிட்டாய் என தகராறு செய்தார்கள். பிறகு எதிரிகள் கெட்ட வார்த்தையால் தெவிடியா, கண்டாரஓலி என்று பேசினார்கள். கண்ணன் கீழே கிடந்த கல்லை எடுத்து அ.சா.1 முதுகின் மீது குத்தினார். பழனியம்மாள் அ.சா.1 கன்னத்தில் அறைந்தார். ஆனந்தன் அ.சா.1 எட்டி உதைத்தார். பாபு அ.சா.1 காலை பிடித்து தரதரவென்று இழுத்தார்.

3) பிறகு காயம் அடைந்த அ.சா.1 யை இரு சக்கர வாகனத்தில் ஜலகண்டாபுரம் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்து பிறகு சேலம் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றார். ஆஜர் எதிரிகள் தான் அடித்ததாக சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். தற்போது என்னிடம் காட்டப்படும் கல்லால் தான் அ.சா.1 யை

அடித்தார்கள் என்று சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை—**</u>

4) தண்ணீர் எப்போது ஏற்றுவார்கள் என்றால் நேரம் குறிப்பாக சொல்ல முடியாது. எதிரிகள் என் உறவினர்கள். எங்களுக்குள் முன்விரோதம் உள்ளதா என்றால் இல்லை. அடிக்கடி பிரச்சனை ஏதோ ஒரு வகையில் ஏற்படும். புகார்தாரரும் என் உறவினர் தான். எதிரிகள் வீடு மேட்டு பகுதியில் உள்ளது என்றால் ஆமாம்.

5) மேற்கு பகுதியில் தண்ணீர் குறைவாகவும், கிழக்கு பகுதியில் தண்ணீர் அதிகமாகவும் வருவது குறித்து எதிரிகள் கேட்க வந்தார்களா என்றால் தண்ணீர் வரவில்லை என்று கேட்க வந்தார்கள். துரைசாமி, பழனியப்பனை அடித்தார்கள். போலீசார் என்னை எங்கு விசாரித்தார்கள் என்றால் என் வீடு உள்ள டேங் அடியில் 10 அடி தூரத்தில் உள்ளது. ரேவதி வீடு 100 மீட்டர் தூரத்தில் உள்ளது.

6) போலீசார் என்னிடம் எங்கு வைத்து கையொப்பம் வாங்கினார்கள் என்றால் காவல் நிலையத்தில் வாங்கினார்கள். தேதி நினைவில்லை. வீட்டருகில் போலீசார் விசாரிக்கவில்லை என்றால் ஆமாம். சம்பவம் நடந்த இடத்திற்கு போலீசார் வந்தார்களா என்றால் வந்தார்கள். போலீசார் வீட்டிற்கு வந்து என் அம்மாவை விசாரித்தார்கள். எதிரிகள் துரைசாமியை அடிக்கவில்லை என்றும் முன்விரோதம் காரணமாக எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தண்ணீர் வரவில்லை என்று தான் கேட்டார்கள் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

D.Myilswamy Digitally signed by D.Myilswamy Date: 2025.12.02 17:57:19 +0530

Judicial Magistrate No.II,
Mettur.